# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

## PROCUREMENT FOR THE SUPPLY OF 06 NOS. OF FORK LIFT 03 TON SRI LANKA RAILWAYS - IFB No. SRS F.8149

01. இலங்கை, கொழும்பு, த.பெ. இல. 355, புகையிரத சேவை தலைமை அலுவலகம், இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்வனவுக் குழு தவிசாளர் (மேல்நிலை), 06 எண்ணிக்கையான 03 தொன் Fork Lift வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**
**தொலைபேசி : 94 (11) 2438078 அல்லது 94 (11) 4600202**
**தொலைநகல் : 94 (11) 2432044**
**மின்னஞ்சல் :** srs.slr@gmail.com, tender1@railway.gov.lk
**இணையதளம் :** www.railway.gov.lk

04. Fork Lift வழங்குவதில் 10 வருட அனுபவம் உள்ள, கடந்த 10 ஆண்டுகளுக்குள் குறைந்தது 20 எண்ணிக்கையான Fork Lift விற்பனை செய்துள்ள மற்றும் இயைபுடைய உற்பத்திக்கு உள்நாட்டு முகவர்களைக் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் விலைக்கோருவதற்கு தகுதியுடையவர்கள். நிகரான வர்த்தக நாம இயந்திரங்களை உற்பத்தி செய்து வழங்குவதில் 10 வருட அனுபவம் உள்ள மற்றும் இயந்திரங்களின் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான அங்கீகாரம் பெற்ற ISO 9001:2008 தர உறுதிச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் உற்பத்தியாளர்களுக்கான ஒரு தகுதித் தேவைப்பாடாகும்..

05. மீளளிக்கப்படாத கட்டணமாக 6,650.00 ரூபாவை 2025-09-25ஆம் திகதி முதல் 2025-10-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் செலுத்துவதன் பேரில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. இரத்மலானை, பிரதான பொறிமுறை பொறியியலாளர் உப திணைக்களத்தில் 2025-10-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

07. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 300,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாக விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. விலைமனுக்கள் 2025-10-10ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு (மேல்நிலை),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**Ref. No. SRS/F.8149**